www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

# Kanchipuram Dt

## காலாண்டுப் பொதுத்தேர்வு – 2024

## பதினொன்றாம் வகுப்பு

நேரம்: 3.00 மணி **வணிகவியல்** மதிப்பெண்கள்:90

### பகுதி – அ

I சரியான விடையை தேர்ந்தெடுத்து எழுதுக:– 20x1=20

1. ________ முதன்முதலில் சுல்தானாக இருந்தார். அடர்ந்த வனப்பகுதிகளில் பாதை உருவாக்கி வியாபாரம் செய்ய வழி வகுத்தார்.
   அ) பால்பன் ஆ) வாஸ்கோடகாமா இ) அக்பர் ஈ) அலாவுதின் கில்ஜி
2. அன்பு மற்றும் பாசம் அல்லது சமூக சேவை உள்நோக்கம் ஆகியவற்றால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் ________
   அ) பொருளாதாரச் செயல்பாடுகள் ஆ) பண நடவடிக்கைகள்
   இ) பொருளாதாரச் சார்பற்ற செயல்பாடுகள் ஈ) நிதி நடவடிக்கைகள்
3. இரும்பிலிருந்து தாதுக்களைப் பிரித்தெடுக்கும் தொழிற்சாலை என்பது ________
   அ) கட்டுமானத் தொழில்கள் ஆ) தயாரிப்புத் தொழில்கள்
   இ) பிரித்தெடுக்கும் உற்பத்தி தொழில்கள் ஈ) மரபுசார் உற்பத்தி தொழில்கள்
4. பின்வருவனவற்றுள் எந்த ஒன்று கூட்டுறு சாரா நிறுவனம்?
   அ) கூட்டுப் பங்கு நிறுமம் ஆ) தனியாள் வணிகம்
   இ) அரசு நிறுமம் ஈ) கூட்டுறவு
5. கூட்டாண்மை உண்டாக்கப்படுவது ________
   அ) ஒப்பந்தத்தால் ஆ) கூட்டாளிகளிடையே உறவு
   இ) அரசின் வழிகாட்டல் ஈ) நட்பின் அடிப்படையில்
6. நிறுமத்தின் இயக்குநரை கீழ்கண்டவற்றுள் யார் தேர்ந்தெடுக்கிறார்கள்? ________
   அ) கடனீந்தோர் ஆ) கடனாளர்
   இ) கடனீட்டு பத்திரதாரர் ஈ) பங்குதாரர்கள்
7. நுகர்வோர் கூட்டுறவு ________ முதன் முதலாக வெற்றிபெற்றது.
   அ) இங்கிலாந்து ஆ) அமெரிக்கா இ) சுவிஸ் ஈ) இந்தியா
8. பன்னாட்டு நிறுமம் என்பது ________
   அ) எந்த ஒரு அரசாங்கத்தின் கட்டுபாட்டிற்கு அப்பாற்பட்டது.
   ஆ) உலகின் முதல் 200 நிறுவனங்களின் ஒன்றாகும்.
   இ) ஒன்றுக்கும் மேற்பட்ட நாட்டில் நிறுவனங்களை கொண்டுள்ளது.
   ஈ) இவை அனைத்தும்
9. அரசு நிறுவனங்களின் முதன்மையான நோக்கம் என்பது ________
   அ) இலாபம் ஈட்டுதல் ஆ) வேலை வாய்ப்பை உருவாக்குதல்
   இ) மக்களுக்கு சேவை செய்தல் ஈ) மேற்கூறிய அனைத்தும்

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



10. ரூபாய் நோட்டுகளை வெளியிடுவதற்கு எந்த வங்கிக்கு அதிகாரம் உள்ளது?
அ) மைய வங்கி ஆ) வணிக வங்கி
இ) கூட்டுறவு வங்கிகள் ஈ) வெளிநாட்டு வங்கிகள்
11. உள்ளூர் பகுதி வங்கிகள் ஊக்குவித்து வருவது _______
அ) கிராம சேமிப்பு ஆ) வணிகச் சேமிப்பு
இ) தொழிற்துறை வளர்ச்சி ஈ) விவசாய வளர்ச்சி
12. RTGS மூலம் குறைந்தபட்சம் எவ்வளவு பணம் பரிமாற்றம் செய்ய முடியும்?
அ) எவ்வளவு தொகை வேண்டுமானாலும் ஆ) 50,000
இ) 2 லட்சம் ஈ) 5 லட்சம்
13. பண்டகக் காப்பகம் _______ மையமாக பொருட்களை வைத்திருக்கிறது.
அ) சந்தையிடுதல் ஆ) வரிசைப்படுத்துதல் இ) வழங்கல் ஈ) விற்பனை செய்தல்
14. வான்வழி அனுப்பீட்டு ரசீது _______ அசல் பாகங்களில் தயாரிக்கப்படுகிறது.
அ) ஒன்று ஆ) இரண்டு இ) மூன்று ஈ) நான்கு
15. காப்பீட்டின் அடிப்படைக் கோட்பாடு _______ ஆகும்.
அ) மிக்க நம்பிக்கை ஆ) கூட்டுறவு இ) பகர உரிமை ஈ) அண்மைக் காரணம்
16. பெயர்ச்சியியலின் முக்கிய நன்மை _______
அ) உற்பத்தி மேம்பாடு ஆ) செலவுகளை குறைத்தல்
இ) இலாபம் ஈட்டுதல் ஈ) பண்டகக் காப்பு
17. சமூகப் பொறுப்புணர்வு வணிகத்தில் பண்டங்களை வழங்குகிறது _______
அ) அதிக விலை ஆ) குறைந்த விலை இ) நியாயமான விலை ஈ) மிதமான விலை
18. நெறிமுறைகளுக்கான தேவைகள் _______
அ) உயர்மட்ட மேலாண்மை
ஆ) நடுத்தர அளவிலான மேலாளர்கள்
இ) மேலாண்மையில் இல்லாத தொழிலாளர்கள்
ஈ) மேற்கண்ட அனைத்தும்
19. நேர்மை பங்குதாரர்கள் ஒரு நிறுமத்தின் _______
அ) கடனீந்தோர் ஆ) உரிமையாளர்கள்
இ) கடனாளிகள் ஈ) இவை எதுவும் இல்லை
20. அமெரிக்க வைப்பு இரசீது வெளியிடப்படுவது _______
அ) கனடா ஆ) சீனா
இ) இந்தியா ஈ) அமெரிக்க ஐக்கிய நாடுகள்

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



## பகுதி – ஆ

II எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளி. (வினா எண் 30 கட்டாய வினா) 7x2=14

21. நாளங்காடி என்றால் என்ன ?
22. கர்த்தா என்பவர் யார் ?
23. கூட்டுறவு வரையறு.
24. பொது கழகங்களுக்கு இரண்டு உதாரணங்களை குறிப்பிடுக.
25. வளர்ச்சி வங்கிகள் பற்றி நீவிர் அறிவது யாது ?
26. கைப்பேசி வங்கியியல் பற்றி கூறுக.
27. போக்குவரத்து – வரையறு.
28. தனி உரிமையியல் இரண்டு தீமைகளைக் கூறுக.
29. நன்நெறி என்றால் என்ன ?
30. ரவி என்பவர் சொந்தமாகத் தொழில் தொடங்கினார். அவருடைய தந்தையார் கணக்குகளை பராமரிக்கவும் மாலையில் அவருடைய சகோதரர் வாடிக்கையாளர்களைப் பார்த்து கொள்ள உதவினார். ரவி தனது தந்தைக்கும் சகோதரருக்கும் மாதச் சம்பளம் வழங்கினார். இது எந்தவிதமான வியாபார அமைப்பு என்பதை அடையாளம் காண்க.

## பகுதி – இ

III எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளிக்கவும்:
(வினா எண் 40 கட்டாய வினா) 7x3=21

31. மனித செயல்பாடுகள் என்றால் என்ன ? விளக்குக.
32. சேவைத் தொழில்கள் என்றால் என்ன ?
33. தனியாள் வணிகத்திற்கு சில உதாரணங்களை கூறுக.
34. அயல்நாட்டு நிறுமம் என்றால் என்ன ?
35. இந்தியப் பன்னாட்டு நிறுவனங்கள் ஏதேனும் மூன்றை குறிப்பிடுக.
36. இந்திய ரிசர்வ் வங்கியின் தோற்றம் பற்றி கூறுக.
37. பண்டகக் காப்பாளர் இரசீது – பண்டக சான்றாணை வேறுபடுத்துக. (ஏதேனும் 3)
38. பயிர் காப்பீட்டின் பொருள் தருக.
39. கூட்டாண்மை நிறுவனத்தில் குறைந்தபட்ச, அதிகபட்ச உறுப்பினர்களின் எண்ணிக்கை யாது ?
40. வணிக வங்கிகளுக்கு சில உதாரணம் தருக.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



பிரிவு – ஈ

IV அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 7x5=35

41. அ) வணிகத்தின் பல்வேறு தடைகளைக் கூறுக. (ஏதேனும் 5)

*(அல்லது)*

ஆ) பெருநிறுவன ஆளுகையின் நன்மைகளை குறிப்பிடுக. (ஏதேனும் 5)

42. அ) சிறுகுறிப்பு வரைக:

1) பகுப்பாய்வு உற்பத்தி தொழில்
2) மரபுசார் உற்பத்தி தொழில்கள்
3) கட்டுமானத் தொழில்கள்

*(அல்லது)*

ஆ) தனி உரிமையியலின் நன்மைகளைக் கூறுக. (ஏதேனும் 5)

43. அ) கூட்டாண்மை ஒப்பாவணத்தில் உள்ள உள்ளடக்கம் யாது? (ஏதேனும் 5)

*(அல்லது)*

ஆ) சமூகப் பொறுப்புணர்வின் தேவைகளை விளக்குக. (ஏதேனும் 5)

44. அ) செயல்முறை விதிகளில் அடங்கியுள்ள பொருளடக்கங்கள் யாவை? (ஏதேனும் 5)

*(அல்லது)*

ஆ) ஏதேனும் ஐந்து தனிநபர் முதலீட்டு வழிகளை விளக்குக.

45. அ) கூட்டுறவுச் சங்கத்தின் நன்மைகள் யாவை? (ஏதேனும் 5)

*(அல்லது)*

ஆ) உலகளாவிய வைப்பு இரசீதிற்கும் அமெரிக்க வைப்பு இரசீதிற்கும் உள்ள வேறுபாடுகள் யாவை? (ஏதேனும் 5)

46. அ) துறைவாரி நிறுவனங்களின் நன்மைகளை விவரி. (ஏதேனும் 5)

*(அல்லது)*

ஆ) தொடர்வண்டி போக்குவரத்தின் நன்மைகளை விளக்குக. (ஏதேனும் 5)

47. அ) இந்திய ரிசர்வ் வங்கியின் பல்வேறு பணிகளை விரிவாக வகைப்படுத்துக. (ஏதேனும் 5)

*(அல்லது)*

ஆ) பல்வேறு வகையான பண்டகக் காப்பகங்கள் யாவை? (ஏதேனும் 5)

***/***

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

**காஞ்சிபுரம்**, செங்கல்பட்டு,கடலூர், மயிலாடுதுறை, நாகப்பட்டினம் மற்றும் திருவாரூர் மாவட்டங்கள்

## காலாண்டுப் பொதுத் தேர்வு - 2024

### 11 - ஆம் வகுப்பு வணிகவியல் - விடைக் குறிப்பு

| சரியான விடையைத் தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதுதல். 20 X 1 = 20 | | |
|---|---|---|
| 1 | அ | பால்பன் |
| 2 | இ | பொருளாதாரச் சார்பற்ற செயல்பாடுகள் |
| 3 | இ | பிரித்தெடுக்கும் உற்பத்தி தொழில்கள் |
| 4 | ஆ | தனியாள் வணிகம் |
| 5 | அ | ஒப்பந்தத்தால் |
| 6 | ஈ | பங்குதாரர்கள் |
| 7 | அ | இங்கிலாந்து |
| 8 | இ | ஒன்றுக்கும் மேற்பட்ட நாட்டில் நிறுவனங்களை கொண்டுள்ளது |
| 9 | இ | மக்களுக்கு சேவை செய்தல் |
| 10 | அ | மைய வங்கி |
| 11 | அ | கிராம சேமிப்பு |
| 12 | இ | 2 லட்சம் |
| 13 | இ | வழங்கல் |
| 14 | இ | மூன்று |
| 15 | ஆ | கூட்டுறவு |
| 16 | ஆ | செலவுகளை குறைத்தல் |
| 17 | இ | நியாயமான விலை |
| 18 | ஈ | மேற்கண்ட அனைத்தும் |
| 19 | ஆ | உரிமையாளர்கள் |
| 20 | ஈ | அமெரிக்க ஐக்கிய நாடுகள் |

## பகுதி - ஆ

**எவையேனும் ஏழு வினாக்களுக்கு விடையளிக்கவும் அவற்றில் வினா எண் 30 - க்கு கட்டாயம் விடையளிக்கவும்.** 7 × 2 = 14

| வி. எண் | விடைகுறிப்பு | மதிப் பெண் |
|---|---|---|
| 21 | நாளங்காடி என்றால் என்ன?<br>❖ பகலில் வியாபாரம் நடைபெறும் இடத்தை நாளங்காடி என்று பெயர்<br>( அல்லது )<br>❖ பாண்டியர்ஆட்சிக்காலத்தில்பொருள்கள் விற்கும் இடத்தினை அங்காடி என அழைக்கப்பட்டது<br>❖ அப் பொருள்களின் விற்பனை, பகலில் நடந்ததை நாளங்காடி என அழைக்கப்பட்டது. | 2 |
| 22 | கர்த்தா என்பவர் யார்?<br>❖ இந்துகூட்டுக் குடும்பத்தின், வியாபாரத்தை கட்டுப்படுத்தி, மேலாண்மை செய்யும் குடும்ப தலைமை உறுப்பினர்க்கு "கர்த்தா" என்றுபெயர். | 2 |
| 23 | கூட்டுறவு- வரையறு<br>❖ H.கால்வேர்ட் அவர்களின் கூற்றுப்படி, "கூட்டுறவு சங்கம் என்பது, உறுப்பினர்களின் பொருளாதார நலனைப் பெருக்கிக்கொள்வதற்காக, மனிதர்கள் என்ற முறையில் சமத்துவ அடிப்படையில் மக்கள் அவர்களாகவே ஒன்றுபடும் அமைப்பே கூட்டுறவு"<br>( அல்லது )<br>❖ சர் ஹொரேஸ் ப்ளங்கெட் அவர்களின் கூற்றுப்படி, "கூட்டுறவு என்பது, சிறந்த விவசாயம், சிறந்த வணிகம் மற்றும் சிறந்த வாழ்க்கை முறையாகும்". | 2 |
| 24 | பொது கழகங்களுக்கு இரண்டு உதாரணங்களை குறிப்பிடுக.<br>1. இந்தியஆயுள் காப்பிட்டுக்கழகம் 2. இந்தியன் ஏர்லைன்ஸ்<br>3. ஏர் இந்தியா 4. எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயு கழகம். | 2×1 = 2 |
| 25 | வளர்ச்சி வங்கிகளைப் பற்றி நீவீர் அறிவது யாது?<br>❖ தொழில்களுக்கான நிதிகளைப் பெரிய அளவில் வழங்குவது,<br>❖ அவைகளின் விரிவாக்கம், நவீனமயமாக்கல் ஆகியவற்றிற்கு நிதி அளிப்பது போன்ற சேவைகளைச் செய்வது வளர்ச்சி வங்கிகள் எனும் தனி வகை வங்கிகள் ஆகும்.<br>❖ மேலும் அவை தொழில்துறை வங்கிகள் எனவும் அழைக்கப்படுகின்றன.<br>❖ இந்தியத் தொழில் வளர்ச்சி (IDBI) வங்கியானது 1964இல், தலைமை வளர்ச்சி வங்கியாக நிறுவப்பட்டது.<br>( ஏதேனும் 2 ) | 2 × 1 =2 |

www.Padasalai.Net

| | | |
|---|---|---|
| 26 | **கைபேசி வங்கியியல் பற்றிக் கூறுக.**<br>❖ பெரும்பாலான வணிக வங்கிகள், சுட்டிகை கைபேசிகளில் பதிவிறக்கம் செய்யக்கூடிய கணினி நிரல்களை அதாவது செயலிகள் (App) என்று அழைக்கப்படும் நிரல்களை வடிவமைத்துள்ளன.<br>❖ சுட்டிகை கைபேசிகளில் இருக்கும் இந்தப் பயன்பாட்டைக் கொண்டு ஒரு வாடிக்கையாளர் தனது கணக்கை எங்கிருந்தும் இயக்கமுடியும்.<br>❖ இந்தச் சேவையினைக் கைபேசி வங்கியியல் என்று அழைக்கின்றோம். | 2 |
| 27 | **போக்குவரத்து - வரையறு.**<br>❖ கே.கே. செக்சேனாவின் கூற்றுபடி, " ஓர் இருட்டறையில், மெழுகு வர்த்தியின் ஒளி பரவுவது போல, போக்குவரத்து அந்தந்த பகுதிகளில் தனது சேவையை ஆற்றுகிறது". | 2 |
| 28 | **தனி உரிமையியல் இரண்டு தீமைகளைக் கூறுக**<br>1) தனி உரிமம் கட்டணம்<br>2) நிலையான உரிமைத் தொகைசெலுத்துதல்<br>3) தனி உரிமம் அளித்தவர்களின் மதிப்புக்கு களங்கம் ஏர்படுத்துதல்<br>4) சுதந்திரமின்மை<br>5) குறைந்தளவு தயாரிப்பு பொருட்களையே கையாள முடியும் | 2×1<br>= 2 |
| 29 | **நன்நெறி என்றால் என்ன?**<br>❖ சரியான அல்லது தவறான, நன்மை மற்றும் தீமையை தீர்மானிக்க உதவும் ஒழுங்குணர்வின் மூலமாக பெறப்பட்ட நடத்தையை தெரிவிப்பதையே நன்நெறி எனப்படும். | 2 |
| 30 | **தனியாள் வணிகம்** | 2 |

## பகுதி - III

எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் 40 - க்கு கட்டாயம் விடையளிக்கவும். $7 \times 3 = 21$

| வி. எண் | விடைகுறிப்பு | மதிப் பெண் |
|---|---|---|
| 31 | **மனித செயல்பாடுகள் என்றால் என்ன? விளக்குக.**<br>❖ மனிதன் தனது தனிப்பட்ட விருப்பங்களையும், தேவைகளையும் பூர்த்தி செய்து கொள்வதற்காக மேற்கொள்ளும் நடவடிக்கைகளை மனித செயல்பாடுகள் என்று பெயர்.<br>❖ இவை இரண்டு வகைப்படும். அவை –<br>1) பொருளாதாரச்செயல்பாடுகள் 2) பொருளாதாரச்சார்பற்ற செயல்பாடுகள். | 2<br><br>1 |
| 32 | **சேவைத்தொழில்கள் என்றால்என்ன?**<br>❖ இயல் பொருட்களை உற்பத்தி செய்யாமல், சேவைப் பொருட்களை இலாபத்திற்கு விற்பனை செய்பவை, சேவைத் தொழில்கள் எனப்படுகின்றன. | 3 |



| | | |
|---|---|---|
| 33 | **தனியாள் வணிகத்திற்கு சில உதாரணங்களை கூறு.**<br>1. இனிப்புகடை 2. பெட்டிக்கடை 3. அழகு நிலையங்கள்<br>4. தையலகம் 5. சலவை நிலயம் 6. பழ வியாபாரம்<br>( தொடர்புடைய பிற விடைகளுக்கும் மதிப்பெண் வழங்கலாம்)<br>( ஏதேனும் 3 ) | 3×1<br>= 3 |
| 34 | **அயல் நாட்டுநிறுமம்என்றால்என்ன?**<br>❖ இந்தியாவிற்கு வெளியே வேறு நாடுகளில் பதிவு செய்யப்பட்டு, இந்தியாவில் தொழிலிடம் உள்ள நிறுமம் அயல் நாட்டு நிறுமம் எனப்படும். | 3 |
| 35 | **இந்தியப்பன்னாட்டுநிறுவனங்கள் ஏதேனும் மூன்றைகுறிப்பிடுக.**<br>1) பஜாஜ்<br>2) பிரிட்டானியா<br>3) டிவிஎஸ்<br>4) டாட்டா இன்ஃபோசிஸ்<br>5) பாட்டா<br>( தொடர்புடைய பிற விடைகளுக்கும் மதிப்பெண் வழங்கலாம்) | 3×1<br>= 3 |
| 36 | **இந்திய ரிசர்வ் வங்கியின் தோற்றம் பற்றி கூறுக.**<br>❖ இம்பீரியல்பாங் ஆப் இந்தியா பணவெளியீடு மற்றும் மைய வங்கிக்கான பிற கடமைகளை ஆற்றிவந்தது.<br>❖ 1926 ஆம் ஆண்டில், ஹில்டன் - யங் ஆணையம் அல்லது இந்திய நாணய மற்றும் நிதியியல் தொடர்பான இராயல் ஆணையம் ஒரு மையவங்கி உருவாக்கப் பரிந்துரைத்தது.<br>❖ அதன் விளைவாக, இந்தியரிசர்வ் வங்கிசட்டம்1934 இல் உருவாக்கப்பட்டு, இந்திய ரிசர்வ் வங்கி ஏப்ரல்1, 1935 முதல் செயல்பாட்டிற்கு வந்தது.<br>❖ ஜனவரி 1, 1949 முதல், இந்திய ரிசர்வ் வங்கி அரசுக்குச் சொந்தமான மையவங்கியாக செயல்பட்டு வருகிறது. | 3 |
| 37 | 1. பண்டககாப்பாளர் இரசீது - பண்டகசான்றானைவேறுபடுத்துக ( ஏதேனும் 3 ) | 3×1<br>= 3 |

| | பண்டக சான்றானை | பண்டக காப்பாளர் இரசீது |
|---|---|---|
| 1. | உரிமை மாற்றத்தை ஏற்படுத்தும் ஆவணம். | உரிமை மாற்றத்தை ஏற்படுத்தும் ஆவணம் அல்ல. |
| 2. | மற்றவர்களுக்கு இதை மாற்றி தரஇயலும் | இதை மாற்றித் தர இயலாது |
| 3. | இதை பிணையமாக வைக்க முடியும் | இதை பிணையமாக வைக்க முடியாது |
| 4. | சரக்கை பெற்றுக்கொண்டதற்கான ஒரு அத்தாட்சி மற்றும் சரக்கைப் பெறுவதற்கான அதிகாரத்தை தரும் அவணம் ஆகும். | சரக்கை பெற்றுக்கொண்டதற்கான ஒரு அத்தாட்சி ஆகும் |
| 5. | பண்டக சான்றாணையை மேலெழுதி கொடுப்பதன் மூலம், பொருட்களை | இந்த இரசீதையும், பொருட்களின் உரிமையாளர் கடிதத்தையும் |

www.Padasalai.Net

| | | | |
|---|---|---|---|
| | பண்டகக் காப்பிலிருந்து பெற்றுக்கொள்ளலாம். | இணைத்தால் மட்டுமே பொருட்களை பெற்றுக் கொள்ள முடியும் | |
| 38 | **பயிர்க் காப்பிட்டின் பொருள் தருக.**<br>❖ வறட்சி வெள்ளம் போன்ற காரணங்களால் விவசாயிகளுக்கு இழப்பு ஏற்படும் போது இழப்பீடு வழங்குவதற்காக செய்யப்படும் காப்பீடு பயிர்க் காப்பீடு ஆகும். | | 3 |
| 39 | **கூட்டாண்மை நிறுவனத்தில் குறைந்தபட்ச,அதிகபட்ச உறுப்பினர்களின் எண்ணிக்கை யாது?**<br>❖ குறைந்தபட்ச உறுப்பினர் எண்ணிக்கை 2 பேர்<br>❖ அதிகபட்ச உறுப்பினர்களின் எண்ணிக்கை 50 பேர் | | 2×11/2<br>= 3 |
| 40 | 1) ஸ்டேட்பாங் ஆப் இந்தியா<br>2) கரூர்வைஸ்யா வங்கி<br>3) ஸ்டாண்டர்டு சார்ட்டர்டு வங்கி.<br><br>( தொடர்புடைய பிற விடைகளுக்கும் மதிப்பெண் வழங்கலாம்)<br>( ஏதேனும் 3 ) | | 3×1<br>= 3 |

## பகுதி - IV

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** 7 × 5 = 35

| வி. எண் | விடைகுறிப்பு | மதிப் பெண் |
|---|---|---|
| 41.<br>அ) | **வணிகத்தின்பல்வேறுதடைகளை கூறுக.**<br>1. ஆள்சார்தடை<br>❖ உற்பத்தியாளரும் நுகர்வோரும் ஒருவருக் கொருவர் அறிமுகம் செய்து கொள்ளும் சந்தர்ப்பம் ஏற்பட வாய்ப்பே கிடையாது.<br>❖ இக்குறைபாடே ஆள்சார்தடை எனப்படும்.<br>❖ வியாபாரம் இக்குறைபாட்டை நீக்க உதவுகிறது.<br>2. இடத் தடை<br>❖ உற்பத்தியாளரையும், நுகர்வோரையும் பிரிக்கும் தூரமே இடத்தடை எனப்படுகின்றது.<br>❖ இத்தடை, போக்குவரத்தின் மூலம் நீக்கப் படுகின்றன.<br>3. காலத்தடை<br>❖ ஒருகுறிப்பிட்ட காலத்தில் மட்டும்உற்பத்திசெய்யப்படும்பொருட்கள் ஆண்டுமுழுவதும்தேவை ஏற்படும்.<br>❖ தேவையைக் கணக்கில் கொண்டு பேரளவு உற்பத்தி செய்து, நுகர்வோரிடம் விற்கத் தயார் நிலையில் பொருட்களை வைத்திருக்க வேண்டும்.<br>❖ பண்டகக்காப்பாகம் காலத்தடையை நீக்குகிறது<br>4. நட்ட இடர்பாட்டுத்தடை<br>❖ ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு இருப்புவைக்க பொருட்களைக் கொண்டு செல்லும்போது, ஆட்களாலும், இயற்கையாலும் நட்டம் ஏற்பட வாய்ப்பு உண்டு.<br>❖ இவ்விடர் தீக்காப்பீடு, கடல்சார் காப்பீடு மற்றும்பொதுக் காப்பீடு மூலம் நட்டம் நிவர்த்தி செய்யப்படுகின்றன<br>5. அறிவுசார்தடை<br>❖ சந்தை நிலவரங்களைப் பற்றித் தெரிந்துகொள்ளமுடியாததால் நுகர்வோர் தரமான பொருட்களை நியாயமான விலையில் வாங்க இயலாமல் போய்விடக் கூடும்.<br>❖ இது அறிவுசார்தடை எனப்படும்.<br>❖ நல்ல விளம்பரம் மற்றும் விற்பனையாளர் சேவைகள் மூலம் இத்தடை நீக்கப்படுகின்றன.<br>6. நிதித்தடை<br>❖ உற்பத்தியாளர்களுக்கும், வர்த்தகர்களுக்கும் அவசியமான நேரத்தில் தேவையான நிதி கிடைப்பதில்லை.<br>❖ நிதி ஆதாரம் குறைந்து, வியாபாரம் தடைப்படுதலே நிதித் தடை எனப்படுகின்றது.<br>❖ இத்தடை, வங்கி மற்றும் நிதி நிறுவனங்களால் நீக்கப்படுகின்றன.<br><br>( அல்லது ) | 5×1<br>= 5 |
| 41.<br>ஆ) | **பெருநிறுவன ஆளுகையின் நன்மைகளை குறிப்பிடுக.** ( ஏதேனும் 5 )<br>1) நல்ல பெருநிறுவன ஆளுகை மூலம் நிறுவனத்தின் வெற்றியை உறுதி செய்ய மற்றும் பொருளாதார மேம்பாட்டை ஏற்படுத்த இயலும்.<br>2) தொழில் அமைப்புகளின் நிலையான வளர்ச்சியை உறுதிப்படுத்துகிறது.<br>3) பல்வேறுபட்ட பங்குதாரர்களின் நலன்களைச் சீரமைத்தல்<br>4) முதலீட்டாளர்களின் மத்தியில் நம்பிக்கையை ஏற்படுத்துதல் மற்றும் அதன் மூலம் முதலீட்டை அதிகரிக்க செய்தல்<br>5) நிறுமங்களுக்கான மூலதனச் செலவினைக் குறைக்கின்றன.<br>6) பங்கு விலையின் மீது நேர்மறை தாக்கத்தைக் கொண்டுள்ளது.<br>7) பெருநிறுவன ஆளுகைக் குழு நிறுமங்கள் தங்களின் குறிக்கோள்களை அடைய மேலாளர்களுக்கு ஊக்கமளிப்பது<br>8) தேவையற்ற கழிவு / விரயம், ஊழல்கள், இடர்பாடுகள் மற்றும் தவறான மேலாண்மை போன்றவற்றை தவிர்த்தல்<br>9) நிறுமம் மீதான மக்களின் கருத்துருவத்தைக் கூட்டுகிறது.<br>10) அமைப்புகள் பங்குதாரர்களின் பயன்பாட்டைச் சரியான முறையில் கையாளுகிறது.<br>11) வள ஆதாரங்கள் சிறந்த முறையில் ஒதுக்கீடு செய்வதற்கு வழி வகுக்கிறது.<br>12) தொழில்நெறிமுறைகளை வலுப்படுத்துகிறது. | 5×1<br>= 5 |

www.Padasalai.Net

**42. அ)** **சிறு குறிப்பு வரைக**

அ. <u>பகுப்பாய்வு உற்பத்தி தொழில்</u>

- ஒரு மூலப்பொருளிலிருந்து பல்வேறு வகையான பொருட்களைப் பகுத்து ஆராய்ந்து பிரித்தெடுக்கும் தொழிற்சாலை பகுப்பாய்வு உற்பத்தி தொழிற்சாலை ஆகும். **2**
- <u>எ.கா</u>: எண்ணை சுத்திகரிக்கும் தொழிற்சாலையில், கச்சா எண்ணையிலிருந்து எரிவாயு, பெட்ரோல், டீசல், மண்ணெண்ணெய் ஆகியவற்றை பிரித்தல்.

ஆ. <u>மரபுசார் உற்பத்தித் தொழில்கள்</u>

- தாவரங்களும், மிருகங்களும் நுகர்வோரின் உபயோகத்திற்காக வளர்க்கப்படுவதையே மரபுசார் உற்பத்தி தொழில்கள் எனப்படுகின்றன. **2**
- <u>எ.கா</u> : கால்நடைகள் வளர்ப்பு, கோழிவளர்ப்பு, மீன்வளர்ப்பு, ரப்பர் மரம் வளர்ப்பு, காடுவளர்ப்பு

இ. <u>கட்டுமானத் தொழில்கள்</u>

- கட்டிடங்கள், பாலங்கள், சாலைகள் மற்றும் அணைகள் போன்றவற்றைக் கட்டத் தேவையான பொருட்கள் தயாரிக்கும் தொழிற்சாலையே கட்டுமானத் தொழிற்சாலை எனப்படுகிறது. **1**

**( அல்லது )**

**42. ஆ)** **தனி உரிமையியலின் நன்மைகளைக் கூறுக.** **5**

1) <u>இடர்களை குறைத்தல்</u>
   - தனி உரிமம் பெற்றவர் ஏற்கனவே சட்டப்படி நடைபெறுகின்ற வியாபாரத்தின் வாணிப உரிமையை பெறுவதால், புதியதாக ஒரு வாணிபத்தைத் துவங்குவதில் உள்ள இடர்களில் இருந்து விடுபடுகிறார்.
2) <u>வணிக விரிவாக்கம்</u>
   - பிராந்திய, தேசிய மற்றும் உலகளாவிய கூடுதல் செலவினங்கள் இல்லாமல் தங்களுடைய வர்த்தகத்தை விரிவுப்படுத்த ஒரு வாய்ப்பு கிடைகிறது.
3) <u>விளம்பரச் செலவு</u>
   - வர்த்தகம் சார்புடைய விளம்பரங்கள் அனைத்தும் பொதுவானதாக இருப்பதால், குறைந்த செலவில் பெரும்பாலான விளம்பரச் செலவுகளை தனி உரிமையாளர் மூலம் ஏற்றுக் கொள்ளப்படுகிறது.
4) <u>செயல்பாட்டிற்கு உறுதுணையாக இருத்தல்</u>
   - தனி உரிமம் நிதி ஆதாரத்தை ஏற்படுத்துவது பட்டுமல்லாமல், எந்த இடத்தில் வியாபாரத்தை அமைப்பது, அதை வடிவமைக்கும் முறை, பணியாளர்களுக்கு பயிற்சி வழங்குதல் மற்றும் அன்றாட நடவடிக்கைகளை கையாளும் முறை ஆகியவற்றை முடிவெடுத்து அவைகளை செவ்வனே செய்யும் வழிமுறையை வகுக்கிறது.

**43. அ)** **கூட்டாண்மை ஒப்பாவணத்தில்உள்ள உள்ளடக்கம் யாது?(ஏதேனும் 5 )** **5×1 = 5**

i) கூட்டாண்மையின் பெயர்
ii) நிறுவனம் மேற்கொண்டிருக்கும் தொழிலின் தன்மை
iii) கூட்டாண்மையின் கால வரையறை
iv) கூட்டாளிகள் வழங்கும் மூலதனத் தொகை
v) கூட்டாண்மையிலிருந்து எடுக்கும் தொகை
vi) இலாப நட்டம் பகிர்வு விகிதம்
vii) மூலதனத்தின் மீது வட்டி
viii) எடுப்புத் தொகை மீதான வட்டிவீதம்
ix) கூட்டாளிகள் தரும் கடன்
x) கணக்கு வைப்பு
xi) கூட்டாளிகளின் சம்பளம் மற்றும் கழிவு

**( அல்லது )**

**43. ஆ)** **சமூகப் பொறுப்புணர்வின் தேவைகளை விளக்குக ( ஏதேனும் 5 )** **5×1 = 5**

1) <u>சுயஆர்வம்</u>
   - தொழில் அமைப்புகள் சந்தையில் நிலைத்து செயல்படுவதற்கு சமுதாய எதிர்பார்ப்புகளை நிறைவேற்ற முனைகின்றன.
   - பொதுவாக சமூகத்தின் தேவை மற்றும் எதிர்பார்ப்புகளை நிறைவு செய்வதன் மூலம் தொழில் உரிமையாளர்கள் அங்கீகரிக்கப்படுகின்றனர்.
   - மக்களின் உயர்தர வாழ்க்கை மற்றும் ஆரோக்கியமான வளர்ச்சிக்கு ஏற்ற சூழலை உருவாக்குதல், வேலைவாய்ப்புகளை உருவாக்குதல், ஏழ்மை மற்றும் அறியாமை உள்ளவர்களுக்கும் மற்றும் சமுதாயத்தால் புறக்கணிக்கப்பட்டவர்களுக்கும் முக்கியத்துவம் அளித்தல்.
2) <u>சமுதாய உருவாக்கம்</u>
   - நாட்டின் வளங்களை முழுமையாகப் பயன்படுத்துவதன் மூலம் தொழில் நிறுமங்கள் ஒரு நல்ல சமுதாயத்தை உருவாக்குகின்றன.
   - எனவே தொழில் நிறுமங்கள் மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவு செய்ய வேண்டும்.
3) <u>சமூக அதிகாரம்</u>
   - தொழில் செய்பவர்களிடம் கணிசமான அளவு சமுதாய அதிகாரம் உள்ளது.
   - அவர்கள் மேற்கொள்ளும் செயல் நடவடிக்கைகள் மக்களின் எதிர்கால வாழ்க்கையைத் தீர்மானிப்பதாக அமைகிறது.
4) <u>சமுதாயத்தின் உருவகம்</u>
   - சமூக எதிர்பார்ப்புகளை தொழில் நிறுமங்களால் நிறைவேற்ற முடியும் என்ற எண்ணத்தை மக்கள் மனதில் ஏற்படுத்த வேண்டும்.
   - ஒரு வெற்றிகரமான தொழில் மூலம் தொழிலாளர் மத்தியில் நல்ல உறவுமுறை ஏற்படுத்துதல், நுகர்வோர் மற்றும் பொருள் பகர்வாளர்களுக்கும் உதவிபுரிய இயலும்.
5) <u>பொதுமக்கள் மத்தியில் விழிப்புணர்வு</u>
   - தற்போது தொழிலாளர்கள் மற்றும் நுகர்வோர்கள் தங்களின் உரிமைகள் பற்றி நன்கு அறிந்துள்ளனர்.
   - நுகர்வோர்கள் தரமான பொருட்களுக்கு சரியான விலையைக் கொடுக்கவும் மற்றும் தொழிலாளர்கள் உழைப்பிற்கேற்ற ஊதியம் பெறவும் விரும்புகின்றனர்.
6) <u>சட்டம் மற்றும் ஒழுங்கு</u>
   - நாட்டின் சட்ட ஒழுங்கு முறைகளுக்கு உட்பட்டு செயல்படுவதன் மூலம் தொழில் அமைப்புகள் தொடர்ந்து வெற்றிகரமாக செயல்பட இயலும்.

www.Padasalai.Net

| | | |
|---|---|---|
| 44. அ) | செயல்முறை விதிகளில்அடங்கியுள்ள பொருளடக்கங்கள் யாவை?<br>(ஏதேனும் 5 )<br>1) பங்குகள், பங்குமூலதனம்,பங்குகளின் மதிப்பு மற்றும் பங்குகளின் வகைகள்.<br>2) ஒவ்வொருவகை பங்குநர்களின் உரிமைகள்<br>3) பங்குகள் மற்றும் கடனீட்டுப்பத்திரங்கள் வெளியீடு தொடர்பான விதிகள்.<br>4) பங்குகள் மீதான அழைப்புப்பணத்தை செலுத்தல் மற்றும் அழைப்பு விடுத்தல் தொடர்பான விதிமுறைகள்.<br>5) பங்குமாற்றம் குறித்த விதிகள்.<br>6) பங்காதாயம் அறிவித்தல் .<br>7) நிறுமத்தின் கடன்வாங்கும் அதிகாரம் .<br>8) இயக்குநர்களின் நியமனம், ஊதியம் மற்றும் நீக்கம்.<br>9) கூட்டங்களை நடத்துதல், பகராள், குறைவெண் போன்றவை தொடர்பான நடைமுறைகள்<br>10) நிறுமத்தின் கணக்குவைப்பு மற்றும் தணிக்கை தொடர்பான நடைமுறைகள்<br>11) நிறுமத்தின் பொது முத்திரை.<br>12) நிறுமக் கலைப்புத் தொடர்பான நடைமுறைகள்.<br>( அல்லது ) | 5×1 = 5 |
| 44. ஆ | ஏதேனும் ஐந்து தனிநபர் முதலீட்டு வழிகளை விளக்குக.<br>1) <u>பொது வருங்கால வைப்பு நிதி</u> :<br>❖ இந்தியாவில் உள்ள மிகச்சிறந்த முதலீட்டு வாய்ப்புகளில், இது மிகப் பாதுகாப்பான நீண்டகால முதலீட்டு வாய்ப்பாகும்.<br>❖ இதற்கு முழுமையான வருமானவரி விலக்கு உண்டு.<br>❖ இந்த வருங்கால வைப்பு நிதி கணக்கை வங்கி அல்லது அஞ்சலகத்தில் ஆரம்பிக்கலாம்.<br>❖ இதில் செலுத்தப்படும் தொகை 15 ஆண்டுகளுக்கு முன்பாகத் திரும்பப் பெறமுடியாது.<br>❖ முதிர்வு தேதிக்கு முன்பாக முதலீட்டாளருக்கு நிதி நெருக்கடி அல்லது நிதித் தேவை ஏற்பட்டால், இந்தக் கணக்கிலிருந்து கடன்பெற்று நிதிக் நெருக்கடியை சமாளித்துக் கொள்ளவாய்ப்பு உள்ளது.<br>2) <u>பரஸ்பர நிதிகள்</u><br>❖ பரஸ்பர நிதி என்பது, நிதிநிறுமங்கள் பொதுமக்களிடமிருந்து, பல்வேறு பரஸ்பர நிதித் திட்டங்கள் மூலமாக திரட்டிய பணத்தை, பங்குச்சந்தையில் முதலீடு செய்து, அவை ஈட்டும் இலாபத்தை முதலீட்டாளர்களுக்கு பகிர்ந்தளிக்கும் ஏற்பாடு ஆகும்.<br>❖ இதன்மூலம் சாதாரண மக்கள் மறைமுகமாக பங்குச்சந்தையில் பங்கு பெறும் வாய்ப்பை பெறுகின்றனர்.<br>❖ பரஸ்பர நிதி நிறுவனங்கள் சிறு முதலீட்டார்கள் தேவைக்கு ஏற்ப, பலதரப்பட்ட திட்டங்களை வைத்துள்ளன.<br>3) <u>நேரடி சம உரிமை பங்குகள் (அல்லது) பங்கு கொள்முதல்</u><br>❖ தனிநபர், பங்குகளில் முதலீடு செய்யும் வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ளலாம். ஆனால் அவ்வாறு செய்யும் முன்பாகப் பங்கு மாற்றகங்கள் வாயிலாக விற்கப்படும் பங்குகளைக் குறித்துச் சில செய்திகளை ஆராய்ந்து அறிதல் மிக அவசியம். | 5×1 = 5 |

| | | |
|---|---|---|
| | 4) <u>அசையாச் சொத்தில் முதலீடு செய்தல்</u><br>❖ அசையாச் சொத்தில் முதலீடு செய்தல் என்பது இந்தியாவில் வேகமாக வளர்ச்சி பெற்று வரும் முதலீட்டு துறையாகும்.<br>❖ ஒரு வீட்டு மனை அல்லது அடுக்குமாடி குடியிருப்பு வாங்குவது என்பது, மிகச் சிறந்த தனி மனித முதலீட்டு முறைகளில் ஒன்றாக விளங்குகிறது.<br>5) <u>விலையுயர்ந்த உலோகங்களில் முதலீடு செய்தல்</u><br>❖ தங்கம், வெள்ளி, பிளாட்டினம் போன்ற உலோகங்களில் முதலீடு செய்வது என்பது, மிகப்பழமையான மற்றும் எக்காலத்திற்கும் ஏற்ற முதலீட்டு வழிகளில் ஒன்றாகும்.<br>❖ சந்தை நிலைக்கேற்றார் போல், உலோகங்களின் மதிப்பு மெதுவாக ஆனால் உறுதியாக அதிகரித்துக்கொண்டு இருக்கிறது. இவ்வகை முதலீட்டில், முதலீட்டாளர்கள் எந்தவித நட்டமும் இல்லாமல் அவற்றை உடனடியாக பணமாக மாற்றிக் கொள்ள இயலும்.<br>6) <u>அஞ்சலகச் சேமிப்பு திட்டங்கள்</u><br>❖ அஞ்சலகத்தில் வெவ்வேறு விதமான சிறுசேமிப்பு திட்டங்கள் உள்ளன.<br>❖ அவை 1. அஞ்சலக சேமிப்பு கணக்கு<br>2. அஞ்சலக தொடர் வைப்புக் கணக்கு<br>3. அஞ்சலக நிலைவைப்பு கணக்கு<br>4. அஞ்சலக மாதாந்திர வருவாய்கணக்கு திட்டம்<br>5. மூத்த குடிமக்கள் சேமிப்பு திட்டம்<br>6. பொது வருங்கால வைப்பு நிதி கணக்கு<br>7. தேசியச்சேமிப்பு பத்திரங்கள் ஆகியவை ஆகும்.<br>❖ அஞ்சல் துறையில் உள்ள மேற்கண்ட திட்டங்களில் தங்கள் தேவைகளுக்கேற்ப முதலீட்டார்கள் முதலீடு செய்து பயன் பெறலாம்.<br>7) <u>பொதுவைப்புகள்</u><br>❖ வங்கிகளில் நிலைவைப்பு நிதியில் பணம் செலுத்துவதைவிட, பொது வைப்புகள் அதிக இலாபகரமானவை.<br>❖ இதில் முதலீட்டாளர், முதலீட்டு கால அளவை மிகக் கவனமாகத் தேர்ந்தெடுக்கவேண்டும்.<br>❖ முதலீட்டாளர் அந்த முதலீட்டு தொகையை, முதிர்வு காலத்திற்கு முன்பாக திரும்ப எடுக்க முடியாது.<br>❖ நீண்டகாலத்திற்கு முதலீடு செய்யவிரும்பும் முதலீட்டாளர்கள் பொது வைப்பினைத் தேர்ந்தெடுக்கலாம்.<br>8) <u>நிறும முறிகள் அல்லது கடன் பத்திரங்கள்</u> (Bonds)<br>❖ தாங்கள் சிரமப்பட்டுச் சம்பாதித்த பணத்தைப் பாதுகாப்பாக முதலீடு செய்யவிரும்பும் முதலீட்டாளர்களுக்கு நிறும முறிகள்(பத்திரங்கள்) சீரிய முதலீட்டு வாய்ப்புகளில் ஒன்றாகும்.<br>9) <u>காப்பீட்டு திட்டங்களுடன் இணைந்த பரஸ்பர நிதி</u><br>❖ ULIP என்பது, ஆயுள் காப்பீடு இணைந்த ஒரு பரஸ்பர நிதி முதலீடு ஆகும்.<br>❖ இது காப்பீடு செய்பவருக்கு, இழப்பை ஈடுசெய்வதோடு பங்குகள் மற்றும் கடன்பத்திரங்களில், பரஸ்பர நிதி இணைந்த திட்டம் மூலமாக முதலீடு செய்யும் வாய்ப்பைஅளிக்கிறது. | |

www.Padasalai.Net

**45. அ) கூட்டுறவு சங்கத்தின் நன்மைகள் யாவை? (ஏதேனும் 5 )** — 5×1 = 5

1) <u>தன்னார்வ நிறுமம்</u>
- கூட்டுறவு சங்கங்களில் யார்வேண்டுமானாலும் உறுப்பினர் ஆகலாம்.
- தொகையும் மிகவும் குறைவாக இருப்பதனால், பொருளாதார ரீதியாக பின் தங்கியவர் முதல் முன்னேறியவர் வரை எவரும் உறுப்பினராக ஆகமுடியும்.

2) <u>எளிமையான தோற்றுவிப்பு</u>
- குறைந்தபட்சம் இளவர் அல்லாத 25 உறுப்பினர்கள் ஒன்று சேர்ந்து, கூட்டுறவு சங்கத்தினை ஆரம்பிக்கலாம்.
- சங்கத்தை ஆரம்பிக்க, சட்ட சடங்குகள் அதிகம் இல்லை.

3) <u>மக்களாட்சி</u>
- கூட்டுறவுசங்கங்கள் "ஒருநபர் ஒரு வாக்கு" என்ற கோட்பாட்டில் இயங்கி வரும் நிறுமமாகும்.
- உறுப்பினர் எவ்வளவு பங்குவைத்திருந்தாலும், ஒருவாக்கு மட்டுமே அவரால் செலுத்த முடியும்.

4) <u>வரிச்சலுகை</u>
- அரசும், கூட்டுறவு சங்கங்களை ஊக்குவிக்க பலவகை வரிச்சலுகைகளை வழங்கி வருகின்றது.

5) <u>சமத்துவ அடிப்படையில் இலாபத்தை பகிர்தல்</u>
- கூட்டுறவு சங்கங்கள் ஈட்டும் உபரி, சமத்துவமாக அனைவருக்கும் பங்கிட்டு தரப்படுகிறது.
- இதன் மூலம் கூட்டுறவு சங்கங்களின் அனைத்து உறுப்பினர்களும் பயன் பெறுவர்.

6) <u>வரையறுக்கப்பட்ட பொறுப்பு</u>
- கூட்டுறவு சங்கத்தில் உறுப்பினர்களாக சேர்ந்த நபர்களின் பொறுப்புகள் அவர்கள் வாங்கிய பங்குமுதலுடன் அடங்கி விடுகிறது.
- எனவே உறுப்பினர்களின் பொறுப்பு அளவுடையது.

**( அல்லது )**

**45. ஆ) உலகளாவிய வைப்பு இரசீதிற்கும் அமெரிக்க வைப்பு இரசீதிற்கும் உள்ள வேறுபாடுகள் யாவை?** ( ஏதேனும் 5 ) — 5×1 = 5

| வ. எ ண் | வேறுபாட்டின் அடிப்படைகள் | உலகளாவிய வைப்பு இரசீது | அமெரிக்க வைப்பு இரசீது |
|---|---|---|---|
| 1 | மதிப்பிடுதல் | இது எந்த நாட்டுப் பணத்தின் மதிப்பிலும் குறிப்பிடப்படும் | இது அமெரிக்க டாலரில் மட்டுமே குறிப்பிடப்படும் |
| 2 | யாருக்கு இது வெளியிடப் படும் | ஒன்று அல்லது அதற்கு மேல் உள்ள சந்தையில் உள்ள முதலீட்டாளருக்கு வெளியிடப்படும் | அமெரிக்கக் குடிமகனாக உள்ள முதலீட்டாளருக்கு மட்டுமே வெளியிடப்படும் |
| 3 | எங்குப் பட்டியலிடப் படும் | அமெரிக்கா தவிர்த்த, இதர பங்கு மாற்றகங்களில் பட்டியலிடப் படும் | அமெரிக்கப் பங்கு மாற்றகங்களில் மட்டும் பட்டியலிடப் படும் |
| 4 | ஒப்புதல் | இதனை வெளியிட, அந்நியச் செலாவணி கட்டுப்பாட்டு வாரியத்தின் ஒப்புதல் தேவை இல்லை | இதனை வெளியிட, அமெரிக்கப் பிணையங்கள் மற்றும் மாற்றக இயக்ககத்தின் ஒப்புதல் தேவை. |
| 5 | வெளியீட்டு வழிமுறை | இவை, பட்டியலிடப்பட்ட முழுமையான எண்ணிக்கை உடைய நேர்மைப் பங்குகளாக வெளியிடப்படும். | இவை, சிறு அலகுகளாக பிரிக்கப்பட்ட நேர்மைப் பங்குகளாக வெளியிடப்படும் |
| 6 | மாற்றுகைத் தன்மை | உலகம் முழுவதும் மாற்றககூடியது | அமெரிக்காவில் மட்டும் மாற்றத்தக்கது |

**46. அ) துறைவாரி நிறுவனங்களின் நன்மைகளை விவரி. ( ஏதேனும் 5 )** — 5×1 = 5

1) <u>எளிமையான அமைப்பு</u>
- இதனை அமைப்பதுஎளிது.
- இவ்வமைப்புகளைநிர்வாகமுடிவு எடுத்துஅரசுஅமைப்பதுஎளியமுறையாகும்.

2) <u>பாராளுமன்றம் அல்லது சட்டமன்றத்தின் நேரடிக் கட்டுப்பாடு</u>
- இதனை,பாராளுமன்றம் அல்லது சட்டமன்றத்தின் மூலம் மட்டுமே நேரடியாக கட்டுப்படுத்தப்படும்.
- அத்துறை அமைச்சரே இதற்கு பொறுப்பாவார்.

3) <u>இரகசியம் காத்தல்</u>
- பாதுகாப்பு மற்றும் அணுசக்தி துறைகள் போன்றவை அரசுத்துறைகளின் கட்டுப்பாட்டில்தான் இருக்க வேண்டும்.
- அப்போதுதான் அத்துறைகளில் பணியாளர்கள், தங்களது பணிகள், கொள்கைகள் மற்றும் செயல்பாட்டினைப் பற்றிய இரகசியங்களைப் பாதுகாத்து வைக்க முடியும்.

4) <u>பொது மக்களுக்குவரிச்சுமைகுறைவு</u>
- இத்தொழில் நிறுவனங்கள், தங்களது வருமானத்தை அரசுக் கருவூலங்கள் மூலம் செலுத்தப்படுவதால், பொதுமக்களுக்கு குறைந்த வரியே விதிக்கப்படும்

5) <u>சமூகமாற்றத்திற்கானகருவி</u>
- அரசாங்கம் பொருளாதார மற்றும் சமூக நீதியை, அரசுத்துறை நிறுவனங்கள் மூலமே சிறப்பாக செயல்படுத்த முடியும்.
- ஆகவே, அரசாங்கம் சமூகமாற்றத்தை ஏற்படுத்த, துறைநிறுவனங்களை கருவியாக பயன்படுத்துகின்றன.

**( அல்லது )**

**46. ஆ) தொடர்வண்டி போக்குவரத்தின் நன்மைகளை விளக்குக.** ( ஏதேனும் 5 ) — 5×1 = 5

1) நீண்ட தூரத்திற்கு, கனரக மற்றும் பருமனான பொருட்களை சுமந்து செல்லுவதற்கு மிகவும் பொருத்தமானது.
2) தடையற்ற சேவைகளால், நீண்ட தொலைவு பயணத்தை, பகல் மற்றும் இரவு முழுவதும் வழங்க முடியும்.
3) இது ஒரு வழக்கமான கால அட்டவணையுடன், ஆண்டு முழுவதும் கிடைக்கிறது.
4) இது மழை அல்லது வெயிலான வானிலை நிலைமைகளால் பாதிக்கப்படாத சேவைகளை வழங்குகிறது.

www.Padasalai.Net

5) மோட்டார் வாகனப் போக்குவரத்தினை விட பொருட்களுக்கு சிறந்த உற்பத்தி மற்றும் பாதுகாப்பை வழங்க முடியும்.
6) ஆரம்ப முதலீடு பெரியதாக இருந்தாலும், தொடர் வண்டி ஓட்ட செலவினங்கள், தொடர் வண்டியில் மிகக் குறைவாக இருக்கும்.
7) சரக்குகள், பொதுவாக மூடப்பட்ட பெட்டிகளில் சுமந்து செல்லப்படுவதால் வெயில் மற்றும் மழை போன்றவைகளால் பாதிக்கப்படுவது கிடையாது.
8) அதிக வேகத்துடன், நீண்ட தூரத்தில் சரக்குகளை சுமந்து செல்வதற்கு மோட்டார் வாகனப் போக்குவரத்தினை விட, குறைவான நேரமே தேவைப்படுகிறது.

47. அ) **இந்திய ரிசர்வ் வங்கியின் பல்வேறு பணிகளை விரிவாக வகைப்படுத்துக. ( ஏதேனும் 5 )** — 5×1 = 5

**மேம்பாட்டுப் பணிகள்**

1) பொதுமக்களிடையே வங்கி பழக்கங்களை வளர்ப்பது
- ❖ வங்கி முறையின் மீது பொது மக்களின் நம்பிக்கையைப் பேணிக்காப்பது, இந்திய ரிசர்வ் வங்கியின் பொறுப்பாகும்.
- ❖ குறைந்த செலவில் வங்கி சேவையைப் பெறுதல், வங்கி வாடிக்கையாளர்களின் வைப்புகளைப் பாதுகாத்தல் போன்ற நடவடிக்கைகள் மூலம் மேலும் மேலும் அதிக நபர்களை வங்கி சேவையைப் பயன்படுத்தத் துண்டுகிறது.
- ❖ வங்கி சேவைகளை, வங்கிகள் இல்லாத பகுதிகளுக்கும் விரிவுபடுத்துவதற்கான நடவடிக்கைகளை அது மேற்கொள்கிறது.

2) குறை தீர்வு நடவடிக்கைகள்
- ❖ இந்திய ரிசர்வ்வங்கி 20 வங்கிக் குறைதீர்ப்பு ஆணையாளர்களை 20 மாநிலத் தலைநகரங்களில் (2017 வரை) நியமித்துள்ளது.
- ❖ இந்தியாவில், வங்கிக் குறை தீர்ப்பாளர் திட்டம் (1995 முதல்) சில சேவைகளுக்கு வாடிக்கையாளர் புகார்களைத் தீர்ப்பதற்காக வழங்கப்படுகிற விரைவான மற்றும் குறைந்த செலவு சேவையாகும்.

3) வேளாண்மை வளர்ச்சி
- ❖ வேளாண்மை தொழில், இந்திய ரிசர்வ் வங்கியிடம் முன்னுரிமை பெற்ற பிரிவாகக் கருதப்படுகிறது.
- ❖ அனைத்து அட்டவணையிடப்பட்ட வங்கிகளும் முன்னுரிமைத் துறையான வேளாண்மைத் துறைக்கு, தாங்கள் வழங்கும் கடன்களில் ஒரு குறிப்பிட்ட சதவீதத்தை ஒதுக்கி இருக்க வேண்டும்.
- ❖ இது இந்தியாவில் விவசாயத்தை மேம்படுத்துவதற்காக வேளாண்மை மற்றும் கிராம மேம்பாட்டுக்கான தேசிய வங்கியுடன் (NABARD) நெருக்கமாக இணைந்து செயல்படுகிறது.

4) சிறிய அளவிலான தொழிற்சாலைகளை ஊக்குவித்தல்
- ❖ குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள், முன்னுரிமை துறையில் சேர்க்கப்பட்டுள்ளது.
- ❖ அனைத்து அட்டவணையிடப்பட்டவங்கிளும் தனித்தனியே சிறப்பு கிளைகளைத் தொடங்கி, சிறு தொழில் நிறுவனங்களின் வளர்ச்சிக்கு நிதியுதவி செய்யவேண்டும், என இது வலியுறுத்துகிறது

5) வெளிநாட்டு வர்த்தகத்தை மேம்படுத்துதல்
- ❖ ஏற்றுமதியாளர்களுக்கான கடன்களுக்கான விதிகளை இந்திய ரிசர்வ்வங்கி எளிதாக்கியது,
- ❖ இதன்மூலம் இப்போது ஏற்றுமதியாளர்கள், நீண்டகாலக் கடன் உதவிகளை வங்கிகளில் இருந்து முன் கூட்டியே பெறலாம்.

6) கூட்டுறவு துறையினை ஆதரித்தல்
- ❖ இந்திய ரிசர்வ் வங்கி கூட்டுறவு வங்கிகளுக்கு, சட்டங்களில் விதிவிலக்களித்தும், மறைமுக நிதியளிப்பு வழங்கியும் உதவுகிறது.

**தலைமை மற்றும் மேற்பார்வை பணிகள்**

1) உலகநிதிநிறுவனங்களில்இந்தியாவின்பிரதிநிதி
2) இந்தியவங்கிகளின்கட்டமைப்பினைஒழுங்குபடுத்துதல்மற்றும்மேற்பார்வையிடுதல்
3) பணவியல்உச்சநிலைஅதிகாரி
4) பொருளாதாரஅளவுருக்களை கூர்ந்துகண்காணித்தல்
5) புதியசவால்களுக்குஉடனடியாகப்பதிலளிப்பது

**பாரம்பரியப் பணிகள்**

1. அரசின் வங்கியர் மற்றும் நிதி ஆலோசகராக செயல்படுதல்
2. ரூபாய் நோட்டுகளை அச்சிட்டு வெளியிடுவதில் முற்றுரிமை
3. வங்கியர்களின் வங்கியர்
4. கடன் மற்றும் புழக்கத்தின் கட்டுப்பாட்டாளர்
5. இறுதி நிலை கடன் ஈவோர்
6. தீர்வக அமைப்புகள்
7. அந்நியச் செலாவணி இருப்புகளின் பாதுகாப்பாளர்
8. அந்நியச் செலாவணி விகிதத்தின் பராமரிப்பு
9. நன்பகத் தன்மையுள்ள தகவல்கள் சேகரிப்பு மற்றும் வெளியீடு

**( அல்லது )**

47. ஆ) **பல்வேறு வகையான பண்டகக் காப்பகங்கள் யாவை? ( ஏதேனும் 5 )** — 5×1 = 5

I. உரிமையின்அடிப்படையில்

1. தனியார்பண்டகக் காப்பகங்கள்
- ❖ இவ்வகை பண்டகசாலைகள் தனியார் தொழில் மற்றும் வணிக நிறுவனங்கள், அவை உற்பத்தி செய்யும் பொருட்களைச் சேமிப்பதற்காக உருவாக்கப்படுபவை.
- ❖ இவை, அவற்றின் சொந்த பயன்பாட்டிற்கு மட்டுமே பயன்படுத்தப் படுகின்றது.

2. அரசுபண்டகக் காப்பகங்கள்
- ❖ அரசின் திட்டங்களை அமுல்படுத்துவதற்காக, அரசு இந்த பண்டகக் காப்பாகங்கள் உருவாக்கி நடத்தி வருகிறது.
- ❖ இதன் சேவைகள்,பெரும்பாலும் அரசு துறைகளுக்கு மட்டுமே கிடைக்கின்றன.

3. பொதுப்பண்டகக் காப்பகங்கள்
- ❖ இது பெரிய அளவில், பொதுமக்களுக்காக ஏற்படுத்தப்பட்டது.
- ❖ சிறிய மற்றும் நடுத்தர வணிக நிறுவனங்கள், பெரிய அளவிலான பண்டகக் காப்பாகங்கள் சொந்தமாக அமைக்க முடியாது.

www.Padasalai.Net

- அவர்கள் இம் மாதிரியான பண்டகக் காப்பாகங்களைப் பயன்படுத்திக் கொள்ளலாம்

4. கூட்டுறவுபண்டகக் காப்பகங்கள்
   - இந்த பண்டக காப்பகத்தை ஏற்படுத்தி, நிர்வகிக்கும் பொறுப்பை கூட்டுறவு சங்கங்கள் அல்லது விவசாயக் கூட்டுறவு சங்கங்கள் மேற்கொள்கின்றன.
5. பிணையகாப்புபண்டகக் காப்பகங்கள்
   - இவ்வகை பண்டகக் காப்பகங்கள், அரசிடம் உரிமம் பெற்று இறக்குமதி செய்யப்பட்ட சரக்குகளை சுங்கவரி செலுத்தும் வரை பண்டக காப்பகத்தில் வைத்திருக்க பயன்படுகின்றன.
6. நிறுவனமுறைப் பண்டகக் காப்பகங்கள்
   - ஒவ்வொருநிறுவனமும்செய்யும்வேலையின்தன்மையைப்பொறுத்துஅந்நிறுவனங்கள் பண்டகக் காப்பாகங்களை வைத்திருக்கின்றன.
7. விநியோகமையப்பண்டகக் காப்பகங்கள்
   - தற்காலிகமாக சரக்குகளை ஒன்று அல்லது இரண்டு நாட்கள் வைப்பதற்கும் அங்கிருந்து சரக்குகளை பகிர்ந்தளிக்கவும் , இவ்வகை பண்டகக் காப்பாகங்கள் பயன்படுகின்றன.

II. பண்டங்களின்தன்மைகளின் அடிப்படையில்

1. பொதுவானபண்டகக் காப்பகங்கள்
   - இது உலர்ந்த தானியங்கள், உரங்கள், முதலியவற்றை பேரளவில் சேமித்து வைப்பதற்கான ஒரு பயனுள்ள பண்டகக் காப்பாகங்கள் ஆகும்.
2. சிறப்புபொருள் பண்டகக் காப்பகங்கள்
   - புகையிலை, பருத்தி, கம்பளிபோன்ற குறிப்பிட்டவகை பொருட்களை பாதுகாப்பதற்காக,இவை வடிவமைக்கப்பட்டுள்ளன.
3. குளிர்பதன பண்டகக் காப்பகங்கள்அல்லதுகுளிரூட்டப்பட்ட கிடங்குகள்
   - பொருட்கள் குளிரூட்டப்பட்ட கொள்கலன்களில் கொண்டு செல்லப்படுகின்றன. மற்றும் குளிரூட்டப்பட்ட பண்டகக் காப்பாகங்களில் சேமிக்கப்படுகின்றன.
   - பழங்கள், காய்கறிகள், முட்டை, வெண்ணெய், மீன் மற்றும் இறைச்சி, போன்ற விரைவில் அழுகக்கூடிய பொருட்களை சேமித்து வைப்பதற்காக இந்த பண்டகக் காப்பாகங்கள் பயன்படுத்தப்படுகின்றன.
4. தட்பவெப்பநிலை பண்டகக் காப்பகங்கள்
   - தட்பவெப்பநிலை கட்டுப்பாட்டில் உள்ள பண்டக காப்பகங்கள், பழங்கள் மற்றும் காய்கறிகளின் வளர்சிதை மாற்றத்தை குறைக்க பயன்படுகின்றன.
5. தானியங்கி பண்டகக் காப்பகங்கள்
   - ஒரே நேரத்தில் பல நூறு கிலோ எடையுள்ள சரக்குகளை கையாளக்கூடிய திறன் கொண்டவசதிகள் இங்கு உண்டு.
   - இதற்கு பெரிய முதலீடு, நவீன தொழில்நுட்பம் மற்றும் பெரிய அளவு சுழற்சி உள்ள பொருட்கள், நிறுவனத்தில் இருக்க வேண்டும்.

www.Padasalai.Net